நியமனம் செய்யப்பட்டது கிடையாது. அதிலே additional ஆகவும் போடுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். நீங்கள் கேட்டிருக்கிற additional courses-ஐப் பொறுத்தவரை, அந்தக் கல்லூரியின் முதல்வரிடம் சொல்லி, கருத்துருவினை அனுப்பினால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

19—

மேம்பாலம்

***650—திரு. S. பழனி நாடார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குத்துக்கல்வலசை I.T.I. சந்திப்பில் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கொல்லம்–திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலை எண் 208–ல் (புதிய எண் 744) அய்யாபுரம் விலக்கு முதல் குத்துக்கல்வலசை ஐ.டி.ஐ. சந்திப்பு வரை சாலைப் பாதுகாப்புத் திட்டம், 2020-2021–ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் நிறைவுபெற்றிருக்கின்றன. இதன் பின்னர், போக்குவரத்து நெரிசலும் குறைந்துவிட்டது. எனவே, அங்கு மேம்பாலம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்பட்ட தென்காசி மாவட்டம், தென்காசி தொகுதியில் அமைந்துள்ள குத்துக்கல்வலசை ஐ.டி.ஐ. சந்திப்பானது குற்றாலம், செங்கோட்டை, மதுரை ஆகிய ஊர்களுக்குச் செல்லும் முக்கிய சந்திப்பாகும். இங்கு அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகையால், பொதுமக்களின் நலன் கருதி, இங்கு ஒரு மேம்பாலம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம்–ராஜபாளையம்–தென்காசி மாநில எல்லை வரை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் நான்கு வழிச் சாலையாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி 2 பிரிவுகளாக நடைபெற்று வருகிறது. திருமங்கலம்–ராஜபாளையம் புறவழிச் சாலை வரை நில எடுப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, பணி துவங்கும் நிலையில் உள்ளது என்பது ஒன்று. ராஜபாளையம் புறவழிச் சாலையிலிருந்து மாநில எல்லை வரை நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனால், அந்தச் சாலைகளை விரிவுபடுத்துவதன் மூலமாக போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும். எனவே, அங்கு மேம்பாலம் கட்ட வேண்டிய அவசியம் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மேம்பாலம் கட்டித் தர முடியாது என்று சொன்னதற்காகவா நன்றி சொல்கிறீர்கள். (சிரிப்பு) மறுபரிசீலனை செய்வீர்களா என்று கேட்டு அமருங்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனது வைத்து மேம்பாலம் கட்டித் தர வேண்டும். அவ்வளவுதான்.*

2022 அக்டோபர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக தென்காசி–திருநெல்வேலி நான்கு வழிச் சாலை, தென்காசி புறவழிச் சாலை, சுரண்டை புறவழிச் சாலை ஆகிய திட்டங்களை விரைவில் முடித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், குற்றாலம் செல்கின்ற ஆனைப்பாலம் கட்டப்பட்டு 50 ஆண்டுகளாகிவிட்டன. அது குறித்து கடந்த முறையும் சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். அதை இடித்து, விரிவுபடுத்தி அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டம், தென்காசி–கொல்லம் தேசிய நெடுஞ்சாலைப் பணி, புளியரை முதல் சிவகிரி வரை 33 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகள் 59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோன்று, இலஞ்சி மற்றும் குத்துக்கல்வலசை இடையே இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிக்கும் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 7–11–2002–ல் ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பணிகள் நிறைவுற்றவுடன் மேம்பாலப் பணிகள் துவங்கப்படும்.*

முற்பகல் 10-45

பொதுவாக, பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் பாலம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையிலே இத்தகைய கேள்விகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு செய்தியை உங்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பாகவே, தேர்தல் அறிக்கையிலேயே தரைப்பாலங்கள் எல்லாம் மேம்பாலங்களாக அமைக்கப்படும் என்ற ஒரு வாக்குறுதியை, தேர்தல் காலத்திலேயே அளித்திருந்தார்கள். தமிழ்நாட்டை பொறுத்தளவில், 1,281 தரைப் பாலங்கள் இருக்கின்றன. அவை பல தொகுதிகளிலே, பல மாவட்டங்களிலே இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால், இந்த 2021-2022 ஆம் நிதியாண்டிலே CRIDP *திட்டத்தின் மூலமாக 648 பாலங்களும்,* NABARD *கிராமச் சாலை திட்டத்தின் மூலமாக 41 பாலங்களும்,*

மொத்தம் 689 பாலங்கள் எடுக்கப்பட்டு இந்த நடப்பாண்டிலே 785 கோடி ரூபாயிலே இப்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எஞ்சியிருக்கிற ஏனைய பாலங்கள் இந்த ஆண்டு, 2022-2023 ஆம் நிதியாண்டிலே CRIDP திட்டத்தின் மூலமாக 66 பாலங்களும், NABARD கிராமச் சாலை திட்டத்தின் மூலமாக 84 பாலங்களும், தேசிய நெடுஞ்சாலைகளின் மூலமாக 22 பாலங்களும் எடுக்கப்பட்டு, பணிகளுக்கெல்லாம், tender கோரப்பட்டு, 172 பாலங்களை இந்த ஆண்டிலே முடிப்பதாக இருக்கிறோம். ஆக, ஒட்டுமொத்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அடிப்படையிலே பார்க்கிறபோது, ஏறத்தாழ 861 பாலங்கள் இந்த நிதி ஆண்டோடு நிறைவடைகின்றன. எஞ்சியிருக்கிற 420 பாலங்களை அடுத்த நிதியாண்டு 2023–2024–லே எடுக்கவிருக்கிறோம். அதனால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் கையைத் தூக்குகிறபோது, தங்களது தொகுதிக்கு பாலம் வேண்டுமென்று கேட்கிற காரணத்தினால்தான், ஒட்டுமொத்தமாக இந்தப் புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறேன். ஏனைய பாலங்களை—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அடுத்த நிதியாண்டில் இந்த 420 பாலங்களும் கட்டப்பட்டால், அவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னதைப்போன்று, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், 1,281 தரைப் பாலங்களும் மேம்பாலங்களாக கட்டி முடிக்கப்படும் என்கிற நல்ல செய்தியை உங்களிடத்திலே நான் பகிர்ந்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

ஆதரவற்றோர் இல்லம்

***51168—திருமதி கு. மரகதம் குமரவேல்:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்தில் ஆதரவற்றோர் இல்லம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?